**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******
2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 02 – ம் நாள் வியாழக்கிழமை
******

**இடைமனு எண்.07/2023–ல் அசல் வழக்கு எண்.232/2020**

1.அனிதா
2. மகேஷ் .....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

...எதிராக...

1. கருணாகரன்
2. மனோகரன்
3. இளங்கோவன்
4. இளவரசன், சார்பாக அவரின்
அதிகாரம் பெற்ற முகவர் 6–ம் எதிர்வாதி
கலையரசி மூலமாக
5. தமிழரசி
6. கலையரசி
7 சார்-பதிவாளர்,
செம்பனார்கோயில் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.10.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்களும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்களும், 7–ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

15.11.2022 அன்று இடைமனு எண்.3/2020−ல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re−open) செய்ய உ.வி.மு.ச 151 ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து அதில் இடைக்கால உத்தரவு கோரி இடைமனு எண்.3/2020−ல் மனு தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்கள் ஆஜராகி விசாரணை நிலுவையில் இருந்த நிலையில் இடைமனு எண்.3/2020 ஆனது முழு விசாரணை நடத்தாமல் 15.11.2022 அன்று Close செய்யப்பட்டுவிட்டது. மனுதாரர்களுக்கு இடைமனு எண்.3/2020−ல் விசாரணை செய்து உத்தரவு கிடைக்காததை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்துக்களை மனுதாரர்களின் அனுபவத்திற்கு இடையூறு செய்யவும் முயற்சி செய்கிறார்கள். வழக்கு "A " அட்டவணை சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகள் பயிர் செய்துள்ள சவுக்கு மரங்களை முதிர்வடைந்து 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவை காற்று மற்றும் மழையில் சாய்ந்து மிகவும் சேதமாகி வருகிறது. அவற்றை வெட்டி அறுவடை செய்வதற்கு எதிர்வாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள். இடைமனுவில் மனுதாரரர்கள்/வாதிகளுக்கு உரிய முழுமையான சட்டப்பூர்வ ஆவணங்கள் உள்ளன. அதனால் இடைமனு எண்.3/2020−ஆனது Close செய்யப்பட்டதை Re−open செய்ய வேண்டியது மனுதாரர்களுக்கு நியாயமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே 15.11.2022 அன்று இடைமனு எண்.3/2020−ல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re−open) செய்ய மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை

அனுமதிக்க வேண்டும்.

**2. <u>1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணை குறிப்பாணையின் சுருக்கம்.</u>**

மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. நிலை நிற்க கூடியதல்ல. அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் வழக்கை நடத்தலாம். வழக்கிடை மனு எண்.2/2020–ஐ Re–open செய்ய கொடுக்கப்பட்ட மனு தேவையற்றது. இடைம னு எண்.2/2020 Close செய்யப்பட்டு பல நாட்கள் கழித்து இந்த Re–open மனு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்ககூடியது அல்ல. இடைமனு எண்.2/2020 மனுவானது 80 cpc Disposal மனுவாகும். எனவே அசல் வழக்கானது விசாரணை நிலையில் உள்ளதால் அசல் வழக்கையே வாதிகள் வேறு மனுவையோ Re–open செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு</u>**

3. மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**5.** மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து அதில் இடைக்கால உத்தரவு கோரி இடைமனு எண்.3/2020–ல் மனு தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்கள் ஆஜராகி விசாரணை நிலுவையில் இருந்த நிலையில் இடைமனு எண்.3/2020 ஆனது முழு விசாரணை நடத்தாமல் 15.11.2022 அன்று Close செய்யப்பட்டுவிட்டது என்றும்,

மனுதாரர்களுக்கு இடைமனு எண்.3/2020–ல் விசாரணை செய்து உத்தரவு கிடைக்காததை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்துக்களை மனுதாரர்களின் அனுபவத்திற்கு இடையூறு செய்யவும் முயற்சி செய்கிறார்கள் என்றும், வழக்கு "A " அட்டவணை சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகள் பயிர் செய்துள்ள சவுக்கு மரங்களை முதிர்வடைந்து 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது என்றும், அவை காற்று மற்றும் மழையில் சாய்ந்து மிகவும் சேதமாகி வருகிறது என்றும், அவற்றை வெட்டி அறுவடை செய்வதற்கு எதிர்வாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்றும், இடைமனுவில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிய முழுமையான சட்டப்பூர்வ ஆவணங்கள் உள்ளன என்றும், அதனால் இடைமனு எண்.3/2020–ஆனது Close செய்யப்பட்டதை Re–open செய்ய வேண்டியது மனுதாரர்களுக்கு நியாயமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே 15.11.2022 அன்று இடைமனு எண்.3/2020–ல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re–open) செய்ய மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

**6.** எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல, நிலை நிற்க கூடியதல்ல என்றும், அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் வழக்கை நடத்தலாம் என்றும், வழக்கிடை மனு எண்.2/2020–ஐ Re–open செய்ய கொடுக்கப்பட்ட மனு தேவையற்றது என்றும், இடைமனு எண்.2/2020 Close செய்யப்பட்டு பல நாட்கள் கழித்து இந்த Re–open மனு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்கககூடியது அல்ல என்றும், இடைமனு எண்.2/2020 மனுவானது 80 cpc Disposal மனு என்றும், எனவே அசல் வழக்கானது விசாரணை நிலையில் உள்ளதால் அசல் வழக்கையே வாதிகள் வேறு மனுவையோ Re–open செய்ய வேண்டிய அவசியம்

இல்லை என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தததில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 15.11.2022 அன்று இடைமனு எண்.3/2020-ல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re-open) செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதுாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது விசாரணை (Trial) நிலையில் உள்ளதால் அசல் வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் நடத்த முடியும் என ஆட்சேபணை செய்யப்பட்டது. அசல்வழக்கில் இன்னும் சாட்சிய விசாரணை துவங்கப்படவில்லை, மேலும் விசாரணை இன்றி முடிக்கப்பட்ட இடைமனு 3/2020-ஐ மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. தரப்பினர்களின் மனுவானது போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டு இரு தரப்பினர்களையும் விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில் முடிவு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் விசாரணை இன்றி முடிக்கப்பட்ட இடைமனு எண்.3/2020-ஐ மறுதிறப்பு செய்ய கோரும் மனுதாரர்கள்/வாதிகளின் இமனுவானது அனுமதிக்க தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 02-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.07/2023–ல்
அசல் வழக்கு எண்.232/2020
நாள்.02.11.2023.